ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பலர் ஒன்றுசேர்ந்து வைத்தகம்பெனியிலோ, அல்லது ஒரே பிரபுவி
ளிடத்திலோ, வேலைசெய்து கூலிவாங்கி ஜீவனம்பண்ணுகிறவர்கள்
அந்தக் கம்பெனியின், அல்லது அந்தப் பிரபுவின்நோக்கத்திற்கு விரோத
மாகவும், பரம்பரையாய் வழங்கிவருமவர்களது ஸம்பிரதாயத்திற்கு மாறு
தலாகவும், புதியமுறையில் சீர்திருத்தம் செய்யத்தலையிட்டால் அதில்
அந்தக் கம்பேனித் தலைவரோ, பிரபுவோ, திருப்பப்படுவார்களா? வேலை
ஆட்களுக்கு மேல்பதவியை அளிப்பார்களா? அப்படிச்செய்யவேமாட்
டார்களென்பது லோக அனுபவஸித்தம். உதாரணமாக:—ஓர் பெரிய
பண்ணையில் வேலைபார்த்துவரும் பண்ணையாட்கள் பண்ணை வழக்கத்திற்கு
விரோதமாகக் கூட்டம்போட்டுப் புதியவழக்கத்தை ஆரம்பிக்க முயல்வார்க
ளானல் அந்தப்பெரும்பண்ணையார் பண்ணையாட்களிடம்பிரியப்படுவரோ?
பிரியப்படமாட்டாரென்பதுமாத்திரமல்ல. அந்த ஆட்களை பண்ணையை
விட்டே விலக்கிவிடுவார். இதுபோல் ஜகதீசனுன பரமேசுவரன்
கட்டளை. இட்டவேலையைச் செய்து பலனை அனுபவிக்கவேண்டிய
பராதீனப்பட்ட பிழைப்பிலிருக்கும்பிராணிகள்அவரதுஆக்ஞாஸித்தமான
ஸநாதனதர்மத்திற்கு விரோதமாக ஹிந்துஸமூஹத்தையே புதியமுறையில்
சீர்திருத்தி அமைக்கவேண்டியதாக நினைப்பார்களானல் பரமேசுவரனது
பிரஸாதத்திற்குப் பாத்திரமாவார்களா? அவ்வளவுவேண்டாம். ஈசன்
ஆணைக்கு மாறுதலாக அடிக்குமேலடியாவது அசங்கமுடியுமா? அப்படி
ஸ்வதந்திரமாயொன்றைத் திருத்தி அமைத்துவிடமுடியுமானல் வெரும்
வார்த்தைபேசிக்கொண்டிருப்பானே? கார்யத்தில்காட்டி விடுகிறதுதானே,
இந்தச் சீர்திருத்தவார்த்தைமாத்திரம் பலவருஷங்களாகத் தாண்டவம்
ஆடுகின்றதேயன்றி வேறொன்றுமில்லை. பூர்வயுகங்களிலும் இம்மாதிரியே
பேசியவர் பலருண்டு. அவர் ஸங்கல்பப்பப்படி எதாவது நடந்ததுண்டா?
அஸுரர்களும் அரக்கர்களும்பார்த்தே பலிக்கவில்லையே. அத்தகைய
சக்தியற்ற மற்றவர் நினைத்தபடியெல்லாம் நடந்துவிடுமா? 'ஒருக்காலும்
நடக்கமாட்டாது. ஒருக்கிராமகார்யத்தை அந்தக் கிராமஸ்தர்கள் ஸ்வ
தந்திரமாக காலதேசானுகுணமாகச் சீர்திருத்திக்கொண்டுவருவதுபோல்
ஹிந்துஸமூஹத்தில் அகப்பட்டவர்கள் ஹிந்துஸமூஹகார்யத்தைக் கால
தேசானுஸாரமாகதிருத்தத்தலைப்படுவதாக வைத்துக்கொண்டாலும் சரிப்
படாது. கிராமகார்யத்தில் ஒருவன் ஆக்ஷேபித்தாலும் வழக்கத்தை
மாற்றமுடியாது. நூற்றுக்கு 99. பேர் ஆக்ஷேபிக்கையில் பழையவழக்கம்
ஒருவன் சொல்லுக்காகவோ, ஆசைக்காகவோ மாற்றப்படுமா? அவன்
கொண்டஆசை வீணுகுமேயன்றி ஒன்றும் மாருது. அதுபோல் ஹிந்து
ஸமூகத்தில் 100.க்கு 99.பேர் ஹிந்துதர்மத்தின் மேன்மையான நிலைமை
யைச் சீர்குலையஅடிக்கும் திருத்தத்தை ஆக்ஷேபிக்கையில் ஒரு சிறு பான்
மையோர்மாத்திரம் எப்படித் திருப்பிவிடுவது. இது ஒருநாளும்முடியாத
கார்யம், நடக்காத கார்யம். இதில் ஒருவர் ஆவேசம்கொண்டதை
மற்றவரும் பின்பற்றிப் பிறவியைப் பாழாயடிக்யாமல் யாவரும் பயன்
படச் செய்வார்களாக, சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஹூ கார்த்திகைமீ ௧௮௨

விஷயாசை விடத்தக்கதே.

விஷயாசையால் வெகுபேர் வருத்தப்படுகிறார்கள். முன்னாளிலும் இன்னாளிலும் என்னாளிலும் விஷயாசைகொண்டவர்களே அதிகம். விஷயங்களை வெறுத்தவரைக் காண்பது அரிதிலுமரிது. முன்யுகங்களில் பிராணிகள் விஷயாசைகொண்டிருந்தாலும் வேதத்தை நம்பியேயிருந்தார்கள். வேதவிசுவாஸத்தைவிட்டதில்லை. ராக்ஷஸர்களும் அஸுரர்களும்விஷயங்களிலாசைகொண்டு அவைகளையடைய வேதம்விதித்த வழியிலேயே நின்றார்களேயன்றி அதைமாற்ற முயலவில்லை. ஆனால் ரஜோகுண தமோகுண மேலீட்டால் ஸாதுக்களை ஹிம்ஸிப்பார்கள். அதற்காக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணாதிரூபமாயவதரித்து அந்ததுஷ்டர்களை சிக்ஷித்து ஸாதுக்களை இரக்ஷித்து ஸாத்துவிக தர்மத்தையும் ஸ்தாபித்தாரென்றும், பின்னுமப்படி நேரும்பொழுதெல்லாம் அவதரித்து தர்மத்தைநிலைநாட்டுவாரென்றும் இந்தியசரித்திர ஆராய்ச்சி செய்தவர்களுக்குத் தெரிந்ததே. மேனாட்டு புத்திமான்களில் பலர் இது உண்மையென்றே இந்தியாவைப்பற்றி எழுதும்போது சொல்லியிருக்கிறார்களென்று ஆங்கிலம் கற்றவரறியாததில்லை. அதிலொரு புத்திமான் இந்தியா பலவிதத்திலும் மேன்மைபொருந்தியிருப்பதற்கு தர்மாதர்ம வியவஸ்தையிருந்து வருவதே காரணமென்று கூறினாராம். அப்படியிருக்கையில் நம்மிந்திய நாட்டில் பிறந்த ஹிந்துக்களெனத்தம்மை சொல்லிக்கொள்பவருட்சிலர் வைதிகவித்வேஷத்தால் அத்தகைய தர்மாதர்மவியவஸ்தையை அழிக்கத்தலையெடுத்து ஆத்திரப்பட்டுப்பேசிவருகிறார்கள். முன்னாளில் சுயநலத்தைப்பாராட்டி சிலர் தம்மைக்கெடுத்துவிட்டதாகவும் கூறிவருகிறார்கள். அந்தநாளில் இவரில்லாவிட்டாலும் இவர்கள் மூதாதைகளிருந்திருப்பார்களே. அவர்களுமேன் சுயநலத்தைப்பாராட்டியிருக்கக்கூடாது. அவர்கள் அவ்வளவு புத்தி

மான்களில்லையென சிலர் கூறிவிடுகிறார்கள். அப்படிக்கூறுவது குறையென்பதை தற்காலத்தியவர் கெவனிக்கவில்லைபோலும். நம்முன்னோரை மூடரென மொழிவது மூடத்தனமென்பதை தெரிந்துகொள்ளாதவனுண்டோ? இருக்கமாட்டான். ஆகவே கெவனிக்காத தோஷந்தானிது. விஷயாசை மேலிட்டுவிட்டதால் அது இந்த கெவனத்திற்கு இடங்கொடுக்கவில்லை. விஷயாசை கொள்வது பிராணிகளுக்கு ஸஹஜமானால் இவ்வுலகில் அனுபவிக்கக்கூடிய விஷயங்களிலாசைகொள்வதுபோல் லோகாந்தரங்களில் அனுபவிக்கவேண்டிய விஷயங்களில் ஆசைகொள்வது ஸஹஜமாகும். அப்படியானால் அவைகளை அடையவழிதேடவேண்டாமா? அப்படி ஆசைப்படவேண்டிய லோகாந்தரமும் ஆங்கு அனுபவிக்கவேண்டிய விஷயங்களுமொன்றுமில்லை என்று கண்மூடித்தனமாய்ச் சொல்லிவிடுவது புத்திமான்களுடைய புத்தியில் பிரவேசிக்கமாட்டாது. ஸிருஷ்டிகாலம்முதல் நாளதுவரை புத்தியிற்சிறந்த பெரியோர்கள் லோகாந்தரமுண்டென்றே ஸாதித்திருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள விஷயசுகங்களை அனுபவிப்பதற்குரிய ஸாதனங்களின்னவை என்றும், அங்குபோவதற்கு வழியின்னதென்றும் சுருதிஸ்மிருதிகளைத்தவிர வேறெவ்விடத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன? எங்குமில்லை. ஆகையால் அந்த விஷயத்தில் சுருதிஸ்மிருதிகள்தான் பிரமாணங்கள். அவைகளிற் கூறப்படும் லோகாந்தரத்திய உத்தம விஷயங்களில் ஆசையிருந்தாற்றான் அதை ஸாதிக்கவேண்டியதற்காக இவ்வுலகில் விஷயாசை கொள்ளவேண்டும். அதில்லாவிடில் இவ்வுலகிலுயிர்வைத்திருப்பதே வீணென்று—

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥

“இவ்விதம் பிரவிர்த்திக்கப்பட்ட ஜகச்சக்கிரத்தை எவனொருவன் அனுஸரித்து நடக்கவில்லையோ! இந்திரியங்களுக்கீடுபட்டு ஆயுஸ்ஸு முழுவதும் பாபத்தையே அடையுமவன் ஜீவித்திருப்பது வீணேயாகும்” என்று ஸ்ரீபகவான்கூறுகின்றார். பரலோக ஆசையில்லையென்றால் விஷயாசை விடத்தக்கதேயாம். பாரதமாதாவும் பரலோகமில்லையெனக் கருத்துக்கொண்டவர்களை தன் புதல்வர்களாகப் பாவிக்கமாட்டாள். லோகாந்தரத்தை நம்பாம

லும், வர்ணாசிரம தர்மத்தை அங்கீகரிக்காமலும் தேசஸேவை செய்யவேண்டுமெனச் சொல்பவரிந்தியத்தாய்க்குப் பாத்தியப்பட்டவரல்ல. பரதனென்னும் மஹானுபவன் பெயரையிட்டு பாரத பூமியென்று வழங்கப்படும் என்னிடத்தில் அவர் திவ்ய சரித்திரத்திற்கு நேர்விரோதமாக ஸேவை செய்பவர்கள் என்னை ஹிம்ஸிப்பவர்களாகவே ஆவார்களென்று பாரதமாதா அபிப்பிராயப்பட்டிருக்கிருள். பாரதமக்கள் இதை அவசியம் கவனிப்பார்களாக. இதைக் கவனிக்காவிடில் தேசஸேவைசெய்கிறோமென்றஆசையையொழித்திருப்பதே நலம். ஆகையால் பாரதமாதா மனம்நோகாமல் யாவரும் தேசஸேவை செய்வார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(948-வது பக்கத்தொடர்ச்சி)

சார்வாகமதத்தில் ப்ரத்யக்ஷம் ஒன்றுதான் ப்ரமாணம். அனுமானம். சப்தம் முதலிய ப்ரமாணங்களை ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்பது உலகப்ரஸித்தமான விஷயம். துவைதமதத்தில் ப்ரத்தியக்ஷத்தைத் தவிர சுருதி முதலிய மற்ற ப்ரமாணங்களையும் வேஷத்திற்காக ஒப்புக்கொண்டாலும் அவ்வித ப்ரமாணங்களுக்குள் உண்மையில் ப்ரத்யக்ஷமே உயர்ந்த ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனெனில் அனுமானம் ஆகமம் இரண்டு ப்ரமாணங்களும் தனக்குப் ப்ரத்யக்ஷப் ப்ரமாணத்தின் விரோதமில்லாதவிடத்தில் ப்ரமாணங்களாகவும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தின் விரோதமுள்ளவிடத்தில் அப்ரமாணங்களாகவும் ஆகின்றன. ஆதலால்தான் ப்ரமாணமாவதற்குப் ப்ரத்தியக்ஷப் ப்ரமாணத்தின் அவிரோதத்தை அனுமானுகமங்கள் எதிர்ப்பார்க்கின்றன. ப்ரத்யக்ஷப் ப்ரமாணமோவெனில் தான் ப்ரமாணமாவதற்கு அனுமானுகமப் ப்ரமாணங்களின் அவிரோதத்தை எதிர்பார்க்காமலே ஸ்வயம் ப்ரபலமானதால் ப்ரமாணமாகின்றது. ஸிம்மமானது மான் முயல் முதலியதில்லாமலிருக்கா என்று பார்த்தா காட்டில் ப்ரவேசிக்கின்றது. மான்முதலியதோவென்றால் ஸிம்மமில்லாமலிருக்கிறதா என்று பார்த்துதான் காட்டில்

ப்ரவேசிக்கின்றது. அனுமாநாகமங்கள் மான் முயல்போல் துர்பலங்கள். ப்ரத்யக்ஷமோ ஜாதியினாலேயே ஸிம்ஹம்போல் ப்ரபலமானது. மேலும் எல்லா ப்ரமாணங்களையும்விடப் ப்ரத்யக்ஷம் முதல் ப்ரமாணமானதாலும் ப்ரபலம். ப்ரத்தியக்ஷத்தால் புகை சப்தம் முதலியதை அறிந்தபின்பு தானே அனுமானமும் ஆகமமும் ப்ரமாணமாகின்றது. மேலும் அனுமாநாகமங்களைவிடச் சீக்ரம் விஷயங்களை அறிவிப்பதாலும் ப்ரத்யக்ஷம் ப்ரபலமானது. மற்ற ப்ரமாணங்கள் புகை சப்தம் முதலியதை அறிவித்துக் கொடுத்துத்தான் காரணமாவதாலும் ப்ரத்யக்ஷம் ப்ரபலம். இவ்வித ப்ரத்யக்ஷப் ப்ராபல்யம்

क्व च प्रत्यक्षतः प्राप्तमनुमागमबाधितम् ।

"ப்ரத்யக்ஷத்தால் அறிவிக்கப்பட்ட விஷயம் அனுமானத்தாலும் ஆகமத்தாலும் எங்கே அடிபட்டது? ஒரு இடத்திலும் கிடையாது" என்று ஆனந்ததீர்த்தாசார்யராலும்,

स्वतःप्रमात्वं प्रत्यक्षे लिङ्गाद्यैस्स्वोपजीविभिः ।
स्वविरोधान्मृत्यवस्थामापन्नैर्नैव बाध्यते ॥

"ப்ரத்யக்ஷத்திலுள்ள ஸ்வத: ப்ராமாண்யமானது ப்ரத்யக்ஷத்தை உபஜீவிப்பதுகளும் ப்ரத்யக்ஷ விரோதமேற்பட்டால் மரணவஸ்தையை அடைவதுகளும் அப்ரமாணமாகப்போவதுகளுமான அனுமானம் முதலிய ப்ரமாணங்களால் பாதிக்கப்படுவதில்லை" என்று வியாஸதீர்த்தராலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சிலவிடங்களில் கிளிஞ்சலை இது வெள்ளியென்று காட்டும் ப்ரத்யக்ஷம்கூட இது வெள்ளியன்று கிளிஞ்சல்தான் என்று காட்டும் ப்ரபலமான மற்றொரு ப்ரத்யக்ஷத்தால் அடிபடுமேதவிர மற்ற அனுமானாதி ப்ரமாணங்களால் அடிபடாது. அனுமானாதிகள் ப்ரபலமான ப்ரத்யக்ஷாதிகளுக்கு ஸஹாயமாக இருக்கலாமே தவிர ஸ்வதந்த்ரமாக அனுமானாதிகள் ப்ரத்யக்ஷத்தை அடிக்காது. இந்த விஷயம்

नहि दृष्टस्य वस्तुनो बलवद्दृष्टिं विनाऽन्यद्बाधकम् ।

"ப்ரத்யக்ஷத்தால் அறியப்பட்ட விஷயத்திற்குப் ப்ரபலமான மற்றொரு ப்ரத்யக்ஷத்தைத்விர மற்றப்ரமாணம் பாதகமாகமாட்டாது" என்று மத்வாசார்யாளாலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் ப்ரபல ப்ரத்யக்ஷத்தால் அடிபடும் ப்ரத்யக்ஷ

மும் பாஹ்யமான சக்ஷுராதிப் பிரத்யக்ஷந்தான். ஆந்தரமான ஸாக்ஷிப் பிரத்யக்ஷமோவென்றால் ஒரு பிரத்யக்ஷத்தாலும் அடிபடாது. இந்த அபிப்பிராயம்

इदञ्चाकलंकितं प्रत्यक्षम् साक्षिरूपञ्चेत्केनापि बाध्यं न कस्याप्यवकाशदम्। बाह्यन्तु प्रबलप्रत्यक्षेण बाध्यं नत्वन्येन बाध्यमन्यस्यावकाशदं वा।

"இது அப்பிரமாணமோ என்கிற சங்கையாகிய களங்கமற்றதும் அதனாலேயே அனுமானாதிகளுக்கு பாதகமாயுள்ளதுமான பிரத்யக்ஷம் ஸாக்ஷிரூபமானால் அது ஒரு பிரமாணத்தாலும் பாதிக்கப்படாது. தன்னைப்பாதிப்பதற்கு ஒரு பிரமாணத்திற்கும் இடங்கொடுக்காது. பாஹ்யப் பிரத்யக்ஷமானால் தன்னைவிடப் பிரபலமான மற்றொரு பிரத்யக்ஷத்தால் அடிபடுமே தவிர மற்ற அனுமானாதி பிரமாணத்தால் அடிபடாது. தன்னை அடிப்பதற்கு அதற்கு இடங்கொடுக்காது" என்று வியாஸதீர்த்தராலேயே கூறப்பட்டிருக்கிறது. ஸாக்ஷிப்பிரத்யக்ஷம் மற்ற பிரத்யக்ஷத்தைவிட பிரபலமாவதற்குக் காரணமென்னவென்றால் ஸாக்ஷியினால் அறிவிக்கப்படுகிற ஸுகம் துக்கம் முதலிய விஷயங்களில் ஒருபொழுதும் ஸந்தேஹம் பிரமம் முதலியது கிடையாது. பாஹ்யப் பிரத்யக்ஷத்தால் தூரத்தில் ஜலமிருப்பதாகக்கண்டால் இது ஒரு ஸமயம் கானல் ஜலமாயிருக்குமோ என்று ஸந்தேஹம் ஏற்படும். அவ்விதம் ஏற்பட்டால் ஜல ஸமீபம்போகிறான். ஜலத்தைத் தொடுகிறான். தீர்த்தத்தை பானம் செய்கிறான். அப்பவும் ஜலந்தானோ என்று ஸந்தேஹம் ஏற்படலாம். பிறகு தாஹத்தாலுண்டான துக்கம்விலகிறது. ஸுகமும் ஏற்படுகிறது. அவ்விதம் ஏற்பட்ட துக்கநிவிருத்தியும் ஸுகமும் ஸாக்ஷியால் அறியப்படுகிறது. ஆதலால் அதில் ஸந்தேஹமில்லை. அதைக்கொண்டு பாஹ்யமாகிய சாக்ஷுஷப் பிரத்யக்ஷத்திலும் ஸந்தேஹம் விலகிறது. ஆகையால் பாஹ்யப்பிரத்யக்ஷத்தில் ஸந்தேஹம் ஏற்பட்டால் ஸாக்ஷிபர்யந்தம்போய் அதைவிலக்கவேண்டியிருப்பதாலும் ஸாக்ஷிப் பிரத்யக்ஷத்தில் அவ்விதம் ஸந்தேஹம் ஏற்படாதபடியாலும் ஸாக்ஷிப்பிரத்தியக்ஷம் எல்லாத்திலும் உயர்ந்தது.

नपरीक्षानवस्थास्यात् साक्षिसिद्धे त्वसंशयात् ।

"பாஹ்யப்பிரத்யக்ஷத்தை இது பிரமாணமாவென்று பரீக்ஷிப்பதில் அனவஸ்தாதோஷம் கிடையாது. ஸாக்ஷிபர்யந்தம் போனவுடன் ஸந்தேஹம் விலகிப்போவதால்" என்றும்.

नहि बाधः क्वचिद्दृष्टो दुःखाद्यनुभवस्य तु ॥

"துக்கம் ஸுகம் முதலியதை அறிவிக்கும் ஸாக்ஷிக்கு பாதம் ஓர் இடத்திலும் காணப்படவில்லை" என்றும்,

सत्यत्वं गगनादेश्च साक्षिप्रत्यक्षसाधितम् ।
साक्षिसिद्धस्य नक्वापि बाध्यत्वं तददोषतः ॥

"ஆகாசம்முதலிய பிரபஞ்சத்திற்கு ஸத்யத்தன்மை ஸாக்ஷிப் பிரத்யக்ஷத்தால் ஸாதிக்கப்பட்டது. ஸாக்ஷிப் பிரத்யக்ஷத்தால் ஸித்திக்கும் வஸ்துவானது ஒருபொழுதும் பாதிக்கப்படாது. ஏனெனில் ஸாக்ஷிக்கு தோஷம் கிடையாதல்லவா" என்றும் மத்வாசார்யாலே ஸாக்ஷிப்பிரத்யக்ஷம் எல்லா பிரமாணங்களையும்விட மேலானது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் துவைத மதத்தில் பிரமாணங்களுக்குள் பிரத்யக்ஷமே உயர்ந்தது. அதற்கு விரோதமுள்ள அனுமானம் அப்பிரமாணம். பிரமாண ராஜனாகிய பிரத்யக்ஷம் துவைதப் பிரபஞ்சம் ஸத்யமென்று போதிக்கிறபடியால் அதற்கு விரோதமாக வேதமானது உபக்ரமோபஸம்ஹாரங்கள் ஒரேவிதமாய் அர்த்தத்தைப் போதிப்பதுமுதலிய தாத்பர்யங்களால் அத்வைதத்தையும் துவைதப் பிரபஞ்சங்கள் மித்யை என்பதையும் தாத்பர்யத்தோடு கூறினபோதிலும் அந்த அர்த்தம் பிரத்யக்ஷத்திற்கு விரோதப்படுவதால் ஸரி என்று இதே அர்த்தத்தை

लिङ्गानि हि तात्पर्यज्ञापकानि नत्वर्थतथात्वस्य ।
तथात्वन्तु प्रमाणाविरोधेनैव निश्चेयम् ॥

"உபக்ரமோபஸம்ஹாராதி தாத்பர்ய லிங்கங்கள் வேதத்திற்கு இன்ன அர்த்தத்தில் தாத்பர்யமென்பதைக் காட்டுமே தவிர அந்த அர்த்தம் வாஸ்தவமென்பதைக் காட்டாது. அந்த அர்த்தம் வாஸ்தவம் என்பது பிரத்யக்ஷாதியான பிரமாணத்தின் விரோதமில்லாதிருப்பதை வைத்து நிச்சயம்செய்யவேண்

டியது'' என்று வியாஸதீர்த்தர் கூறியிருக்கின்றார். ஆதலால் வேதத்திற்குப் பிரத்யக்ஷவிருத்தமான அர்த்தம்கூறினால் அது அப்பிரமாணமாய்விடும். ஆகையால் பிரத்யக்ஷத்திற்கு விரோதமில்லாத வேறு ஏதாவது அர்த்தத்தை ஏகாக்ஷரநிகண்டுமுதலிய ஸாதனங்களைவைத்துக்கொண்டு சொல்ல வேண்டும் என்று பிரத்யக்ஷத்தை அனுஸரித்து வேதத்தைத் திருத்துவது துவைத மதத்திலுள்ள முக்யமான விஷயம், வைதிகமான அத்வைதமதத்திலோவென்றால்

प्राबल्यमागमस्यैव जात्या तेषु त्रिषुस्मृतम् ।

''பிரத்யக்ஷம், அனுமானம், ஆகமம், என்னும் மூன்றுபிரமாணங்களுக்குள் ஜாதியினாலேயே ஆகமத்திற்குத்தான் பிராபல்யம்'' என்பது முதலிய மன்வாதிஸ்மிருதிகளை அனுஸரித்து வேதமே பிரபலப்பிரமாணம். அந்தவேதம் தாத்பர்யத்தோடு ஓர் அர்த்தத்தைத் தெரிவிக்குமானால் அதுவே ஸரியானது. அதற்கு விரோதமாக விஷயங்களை அறிவிக்கும் பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களுக்கு ஏதாவது உபபத்தி கல்பிக்கவேண்டும். அந்த அபிப்பிராயம்.

नहि श्रुतिप्रतिपादितेऽर्थेअनुपपन्ने वैदिकानां बुद्धिः खिद्यते । अपितु तदुपपादनमार्गमेव विचारयति । तस्मादाविद्यको भेदइति श्रुतावद्वितीयत्वोपपत्तये अभिधीयते । नतुव्यसनितया ॥

''சுருதியினால் தாத்பர்யத்தால் தெரிவிக்கப்பட்ட அர்த்தம் ஆபாதமாகப்பராமர்சிக்கும்பொழுது அனுபபன்னமாகத் தோன்றினாலும் வைதிகர்களாயுள்ளவர்களுக்கு அதில் புத்தி அவைதிகர்களாயும், தாந்திரிகளாயுமுள்ள மற்றவர்களைப்போல் பிரத்யக்ஷாதி விரோதமில்லாத வேறு ஏதாவது அர்த்தத்தை இங்கு சொல்லி விடுவோமா என்று' அதற்குவேண்டிய பரிச்சிரமத்தை அடையாது. பின்னையோவெனில் அவ்விதம் தாத்பர்யத்துடன் வேதத்தில் சொல்லப்பட்ட அர்த்தத்தை உபபாதனம் செய்வதிலேயே வழியுண்டா என்று விசாரிக்கும். அப்படி விசாரிக்கும் பொழுது சுருதி, தாத்பர்யத்தோடு அத்வைதத்தைப் போதிப்பதால் அதை உபபந்நமாகச் செய்வதற்காகவே துவைதமாகிய பிரபஞ்சம் அவித்தியாகல்பிதம் ஆவித்யகமான

பிரபஞ்சத்தைக்கொண்டு ஸ்வப்பனம்போல் பிரத்யக்ஷாதி வியவஹாரம் நடக்கிறது என்று சொல்லுகிறோமே தவிர ஆக்ரஹத்துடன் துவைதிகள் துவைதத்தை ஸாதிப்பதுபோல் அத்வைதத்தை நாம் ஸ்தாபிக்கவில்லை" என்று ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகளால் நன்கு போதிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால் துவைதமதத்தில் பிரத்யக்ஷமே உயர்ந்த அசைக்கமுடியாத பிரமாணம். அதற்கு விரோதமில்லாத அர்த்தங்களை போதித்துக்கொண்டு அனுமானாகமங்களும் பிரமாணங்கள் என்பது இதுபர்யந்தம் காட்டிய பிரமாணங்களால் ஏற்பட்டது. ஆகவே சார்வாகமதம்போலவே துவைதமதத்திலும் பிரத்யக்ஷத்திற்குப் பூரணமான கௌரவம் அளிக்கப்பட்டிருப்பதால் துவைதமதம் சார்வாகமதமென்பதற்குத் தடையென்ன? ஆனால் ஸ்பஷ்டமாகச் சார்வாகமதத்தைப்போல் வேதம் அப்பிரமாணமென்று கூறாமல் பிரத்யக்ஷத்திற்கு விரோதப்படாமல் வேதமும் பிரமாணமாகலாம் என்று கூறியது மத்வாசார்யாள் தான் முன்போல் பிரஸ்பஷ்ட சார்வாகாவஸரத்திலில்லாமல் அதைவிட்டு இப்பொழுது மாறுவேஷம்போட்டு வேதத்திலேயே சார்வாகமதத்தைப் புகுத்தி ஸர்வஜனக்ராஹ்யமாகப்பண்ண எண்ணங்கொண்டு பிரச்சன்ன சார்வாகா வஸரத்திலிருப்பதால் என்று அதி ஸூக்ஷ்ம புத்திகளுக்குப் புலப்படாமல்போகாது.

இதுபர்யந்தம் துவைதமதம் பிரச்சன்ன சார்வாகமதம் என்பதற்குப் பிரத்யக்ஷத்திற்குப் பூர்ணகௌரவம் அந்த மதத்தில் கொடுத்திருப்பது என்னும் ஓர் காரணம் காட்டப்பட்டது.

இன்னொரு முக்யமான காரணத்தை வாசகர்கள் அவச்யம் கவனிப்பார்களாக. அதாவது சார்வாகமதத்தில் கை கால் முதலிய அவயவங்களோடுகூடிய சரீரமே ஆத்மா என்பது வெளிப்படையான விஷயம். மத்வமதத்திலும் ஜீவனேகைகால்முதலிய ஸமஸ்தமான கர்மேந்திரியங்கள் ஜ்ஞானேந்திரியங்கள் இவைகளோடு கூடிய சரீரஸ்வரூபன் என்றும் ஸ்வப்னவஸ்தையிலும் மோக்ஷகாலத்திலும் தனக்கு வேறான வெளி சரீரம் இல்லாமல் போனாலும் ஜீவனுடைய ஸ்வரூபபூதமான கை கால் முதலியவைகளோடு கூடிய சரீரத்தால் வியவஹாரங்களை ஜீவன்செய்து

கொண்டிருக்கான் என்றும் மத்வாசார்யாளாலேயே ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் மத்வமத கிரந்தங்களை பார்த்தவர்களுக்கு வெளிப்படை. ஆகையால்சார்வாக மதத்தில் கை கால் முதலியவற்றோடுகூடிய சரீரத்தையே ஆத்மாவென்று சொன்னதுபோலவே மத்வமதத்திலும்கை கால்முதலியவற்றோடு கூடிய சரீரரூபமாக ஆத்மாவைக்கூறியிருப்பதால் மத்வமதம் சார்வாகமதம்தான் என்பதற்குத்தடையென்ன? ஆனால் ஸ்பஷ்டமாகச் சார்வாகமதத்தில்போல் நாசத்தை அடையக்கூடிய இந்த வெளிசரீரத்தையே ஆத்மாவென்றும், சரீரநாசமே மோக்ஷம் என்றும், கூறாமல் இதைக்காட்டிலும் வேறானதும் நாசத்தை அடையாததுமான கை கால் முதலியவற்றோடுகூடிய ஓர் சரீரமே ஆத்மாவென்றும், அதனால் மோக்ஷத்திலும் வியவஹாரம் என்றும் கூறியதற்குக் காரணம் மத்வாசார்யாள் தான் பிரச்சன்னசார்வாக வேஷம்போட்டுக்கொண்டு வேதத்திலிருந்தே சார்வாகமதமானசரீரமே ஆத்மாஎன்பதுமுதலியதிலுள்ளபிரதான விஷயங்களை வெளிப்படுத்த உத்தேசித்திருப்பதால் அவர்ஜநீயமாய்ச் சில அப் பிரதான விஷயங்களில் ஸ்வல்ப மாறுதல்கள் செய்யவேண்டிவந்து நேரிட்டதுதான் என்பது அதி ஸூக்ஷ்ம புத்தியால் ரஹஸ்யதத்துவங்களை விமர்சம் செய்யப் புறப்படும் மேதாவிகளுக்குப் புலப்படாமல்போகாது.

இவ் வுலகத்தில் சிலர் சுகிகளாகவும் சிலர் துக்கிகளாகவும் அதிலும் பல தாரதம்யமுள்ளவர்களாகவும் பிரத்யக்ஷத்தால் காணப்படுவதுபோலவே மோக்ஷத்திலும் ஜீவர்களுக்கு மேலுங் கீழுமாகப் பலவித ஸுக தாரதம்யங்களை மத்வாசார்யாள் தனது மதத்தில் ஸ்தாபித்திருப்பது தனது சார்வாகமத வாஸனையினாலே என்பது மறைக்கமுடியாத மூன்றாவது காரணம். இன்னும் அனேக காரணங்களுண்டு. விரிவிற்குப் பயந்து விடுத்தனம். ஆதலால் மத்வமதம் பிரச்சன்ன சார்வாகமதமென்றும், முதலாவது ரகஸ்யம் முடிந்துவிட்டது.

போலகம் ஸு. ஸ்ரீராமசாஸ்திரி.

|| श्रीः ||

|| धर्मराजद्वाविंशतिः ||

(श्रीवत्सकृष्णसूरि विरचिता)

धर्माधर्मव्यवस्थारुचिरचिरतरोदात्तनिःसीमभूम -
प्राध्वप्रध्वंसशीलैः सुकृतलवकथागन्धसंबन्धवन्ध्यैः ।
वामाचारप्रचारप्रकटितमतिभिः शिष्टगोष्ठीदविष्ठै-
स्तस्मान्नः शार्ङ्गधन्वा शिशिरयतु कृपानूरत्तङ्गैरपाङ्गैः ॥१॥

दुष्टैर्नष्टात्मनीनैर्बहुमुखकुहनाकोटिधाटीपटिष्ठै-
र्दुर्वाराखर्वगर्वोत्कटकलुषमषीरूषिदुःशेमुषीकैः ।
इष्टानुष्ठानशिष्टप्रवरपरिसृतावर्णदुर्वर्णपूर्णैः
कर्णे तूर्णं वितीर्णं दुरितमपगतं चक्रराजः क्रियान्नः ॥२॥

स्फाराहंकारपूरप्रसरविसृमरक्रूरदुष्कर्मभार -
व्यापारोदग्ररक्षःपरिबृढनिबिडप्रापितभ्रातृभावैः ।
गोत्रप्रस्पर्धिगात्रप्रथिमविनमितक्षोणिभिर्मांसवृक्षै-
र्निःशङ्कं क्लेशितान्नः सुखयतु करुणासागरो रामभद्रः ॥३॥

वैधात्रस्तोत्रजातप्रसदनभगवद्व्यञ्जितप्राक्तनोक्ति-
स्तेयश्रेयोदवीयःकुपथचरहिरण्याक्षरक्षःसपक्षान् ।
साधुप्राणापहारोत्सवकरणचिरप्रह्वजिह्वाद्विजिह्वान्
क्षुन्दानः स्वैः खुराग्रैरनिशमवतु नः कोऽपि लीलावराहः ॥४॥

ग्रीष्माविर्भूतभूष्मप्रशमनचतुरोदारधाराधरोद्य-
न्नीरासारावसेकप्रमुदितविरटद्भेककूटैककण्ठैः ।
दुस्तर्कोन्नीतकोटिप्रकटिताविकटाटोपवाचाटभावै-
राविद्धान्दुर्विदग्धैरमृतमयदृशा वीक्ष्य नः पातु कृष्णः ॥५॥

कल्पान्तोद्वेलवेल्लज्जलनिधिविपुलोत्फालकल्लोलजाल -
ध्वानाहंमानदूरीकरणपटुतरैरद्भुतैरट्टहासैः ।
मिथ्यामाहात्म्यतथ्येतरनिरतमहामूढदौर्जन्यगर्जा -
रम्भान्कुम्भेश्वरोऽयं तिरयतु सदयं मङ्गलाश्लिष्टमूर्तिः ॥६॥

ज्वालाचूडालहालाहलविषमफणाजालशेषादितत्त-
द्भूषाभोगीन्द्ररोषाकुलमुखकुहरोदीर्णपूत्कारपूरैः ।
प्लुष्टान्नष्टावबोधानधिमहिपतनक्लिष्टगात्रांश्च दुष्टान्
कुर्वन्सर्वत्र शर्वः कलयतु भवुकं भूरि नागेश्वराख्यः ॥७॥

सस्तम्भान्दग्धवृत्तान्नियतिहतधियः सद्विनिन्दैकसक्तान्
जात्यन्धान्दर्शनेषु श्रुतिसमधिगमे बाढबाधिर्यभाजः ।
कृत्यै रक्षःसदृक्षान्कथमिव बिभृषे देवि सर्वंसहे त्वां
याचे मे चेत्प्रसादः सपदि निजतनौ लापयैतान्समेतान् ॥८॥

आचार्याञ्छम्बरस्य प्रकृतिकपटिनो मेघनादस्य शिष्या -
न्मारीचस्य प्रशिष्यान्कुटिलतरधियो गर्भदासान्मयस्य ।
विद्युज्जिह्वस्य नित्यं निरुपधिसुहृदो मांसपिण्डानखण्डान्
दण्डाघातैः प्रचण्डैः शमयतु शमनः सज्जनानन्दहेतोः ॥९॥

कर्तर्या छिन्धि जिह्वां महदपचरणस्वैरिणीं दुर्जनानां
मूर्धानं भिन्धि विद्वद्विनमनविधुरं मुद्गरेणोद्गरेण ।
दृष्टी दुष्कर्मसृष्टी ननु यम भगवंस्तृन्धि शूलेन तीक्ष्णै-
ष्टङ्कैः संतक्ष्णुहि द्रागपकृपमपरानप्यशेषान्विशेषान् ॥१०॥

जिह्वां छिन्धि शिरो विभिन्धि शतधा नेत्रे समुत्पाटय
श्रोत्रे कर्तय पातयाशु दशनान्गण्डौ मुहुस्ताडय ।
पाणी मोटय दारयोदरमितः पादौ परिक्लेदये-
त्याविष्टानसतः प्रतिस्किरति यस्तस्मै यमायों नमः ॥११॥

आस्यं पूरय पांसुभिर्गलतलं पाशैर्वधान स्वयं
पृष्ठं घट्टय मुद्गरैः परशुभिर्वक्षोऽसतां क्षोभय ।
दण्डैः पोथय सक्थिनी लगुडकैर्जङ्घे पुनश्चूर्णय
श्रीमन्सूचिभिरङ्गुलीस्तुद मुहुस्तुभ्यं यमायों नमः ॥१२॥

दारान्मारय शोषयाङ्गमसतां पुत्रांस्तथा नाशय
प्लोषं देहि निकेतने जहि पशून्बन्धून्समुन्मूलय ।
सर्वस्वं हर धर्मराज परतो नैजैर्विना केवला
भिक्षाकाश्च भवन्तु ते भगवते तुभ्यं यमायों नमः ॥१३॥

स्थूलं नीलमतो महच्च धवलं स्फीतं च पीतं ततः
स्फोटं दुःसहवेदनं क्रिमिचितं पृष्ठे समुद्भावय ।
यक्ष्मश्लीपदमूलशूलमसतामन्यानपि क्षेत्रियान्
रोगानातनु धर्मराज भवते भूयो यमायों नमः ॥१४॥

स्वामिन्भो धर्मराज प्रणतिशतमिदं तुभ्यमेतं वितन्मः
प्रातर्नाम स्मरामस्तव कलुषहरान्सद्गुणानुद्गृणीमः ।
त्वं चेदस्त्रैः प्रसक्तिं विजहिहि करुणागन्धमप्येषु दुष्टे-
ष्वाकृष्टानात्मपाशैर्नय निजनगरं त्वद्भटैरुद्भटैस्तान् ॥१५॥

जिह्वा दुष्टात्मनां साध्ववमतिकथनव्यध्वनित्याध्वनीनाः
स्त्यायत्पूयास्रविस्रस्फुटपिटकनटत्कीटकोटीर्विधाय ।
"धिङ्नस्तत्पर्यणंसीद्यदसितरसनाः पर्यवादिष्म शिष्टान्"
इत्येषां क्रोशनैस्त्वं शमन नतिरियं पूरयाशावकाशम् ॥१६॥

शिष्टैर्व्युष्टेषु दैनंदिनविधिविहितानुष्ठितिस्फीतमोदैः
पूते पुण्येऽपि तीर्थे चिरतरमसतां तिष्ठतां स्नानवर्जम् ।
नेत्रे चारित्रतेजःस्फुरदपरवधूलोकनोद्वृत्तशीले
संताप्यायःशलाकाः शमन नम इदं नन्वमेया निधेयाः ॥१७॥

मिथ्याभूतार्थजातव्यतिभिदुरमहापातकोद्भूततत्त-
ल्लेखोल्लेखप्रयोगप्रशमितसुमनःस्तोमनिश्चिन्तनिद्रौ ।
सर्वान्नीनैः कदर्यैरभिनुतविविधाश्चर्यचौर्यौ विलूया
बाहू राहूपमेयौ नम इदमसतां लीढशाणैः कृपाणैः ॥१८॥

किंचित्कारप्रसीदद्भगवदभिमुखीभावभाग्यातिरेक-
प्रेप्सामात्रोपसीदन्महदवमतये हन्त दीर्घीभवन्तौ ।
निःसंकोचौ खलानामजगरसदृशौ स्तम्भवाताभिभूतौ
पादौ मेदोभृतौ ते नतिरिह करटैः खादय क्लेदितौ त्वम् ॥१९॥

तुण्डं गर्हाकरण्डं महदवमननस्त्याननानावरण्डं
वीथीपर्यन्ततिम्यज्जलशमलमिलन्मृत्तिकाभिर्विकीर्याः ।
श्रोत्रे सद्वृन्दनिन्दाश्रवणपरिणमत्पापपात्रे द्रुताभ्यां
पूर्या लाक्षात्रपुभ्यां शमन जडधियामेष तेऽस्तु प्रणामः ॥२०॥

तप्तायःशूलजालग्रथिततरतनून्प्रस्फुरद्विस्फुलिङ्ग-
ज्वालाधारालकालायसघटितवधूश्लेषणप्लोषिताङ्गान् ।
उग्रंपश्यप्रसर्पद्विषनिरयमिषद्दर्पसर्पोपदष्टा -
नेनोमुक्तानथैनान्सदसदुपदिशन्प्रेषयैष प्रणामः ॥२१॥

वैधेयैर्वैधवेयैः कलिकलितमहाराज्यमूर्धाभिषिक्तैः
पापिष्ठैर्जन्मदुष्टैः प्रतिपदभगवन्निग्रहैकान्तपात्रैः ।
आक्षिप्तान्वस्तुतस्त्वय्यनुपधियमने न्यस्तरक्षाभरान्नः
पाहि श्रीशार्ङ्गधन्वन्नसदुपरिसरन्नव्यबाणप्रयोगः ॥२२॥

यः सर्वत्रापि तिष्ठन्यमयति निखिलं तस्य साक्षाद्यमस्य
श्रीभूमीकोमलाम्बाकमितुरनुपधि प्रीतये निर्मितानि ।
पद्यान्यारूढमन्त्राण्यविकलनियमो यः पठेद्देवसद्म -
न्याशु श्रीशः प्रसन्नः प्रदिशति सकलं मङ्गलं तुङ्गमस्मै ॥२३॥

குறிப்பு—இந்த ஸ்தோத்திரம் மந்திரஸம்புடிதமாயிருப்பதால் ஆஸ்திகர்கள் ஸ்வாமி ஸன்னிதியில் பாராயணம் செய்யலாம். நாஸ்திகவாதம் தொலையும். பா—ர்.

திருச்சி அத்வைதஸபையில் நடந்த உபந்யாஸங்களின் சுருக்கம்.

ஸ்ரீபகவத்பாதாசார்யரவர்களால் உலகத்திற்கு ஏற்பட்ட நன்மை'

(ப்ரம்மஸ்ரீ பக்ஷிதீர்த்தம் ராமச்சந்திர தீக்ஷிதரவர்கள், 25-11-31)

நமது ஆசார்யாள் உலகத்திற்குச்செய்த உபகாரங்களைவிட வேறு ஒருவராலும் அவ்விதம் செய்யமுடியாது. அதாவது உலகில் நிக்ரஹமில்லாமல் அநுக்ரஹமாத்திரம்செய்த ஒருதிவ்யாவதாரம். ராமகிருஷ்ணாதிகளின் அவதாரங்களில் நிக்ரஹம் அநுக்ரஹம் ஆகிய இரண்டு காரியங்களும் உண்டு. இவாளின் அவதாரத்திலோ கேவலம் ஸகல ஜனங்களுக்கும் அனுக்ரஹம்தான். இந்த இன்றியமையாத அவதாரம் ஞானபலம் ஒன்றையே முக்கியமாகக்கொண்டபடியால் புத்தி சக்தியை விசேஷமாக உபயோகித்து ஸகல ஜனங்களுக்கும் க்ஷேமத்தையளித்தது. மேலும் கேவலம் வைராக்ய ப்ரதானமாயும் சமப்ரதானமாயும் செய்த அவதாரமானதால் ஜனங்களுடைய ஹ்ருதயத்தில் இருக்கும் காமக்ரோதாதிகளை விலக்கி வைராக்யாதிகளைப் புகட்டினது. அந்த மகானால் அருளிச்செய்த பாஷ்யாதிகளுக்கும் அவருடைய ஸ்வரூபத்திற்கும் வேற்றுமையே காணப்படுவதில்லை. அவருடைய கருணைவெள்ளலால் நிறப்பப்பட்ட ஹிருதயமென்கிற மகாஸமுத்ரமானது அப்புத்தகங்களிலிருந்து தன்ரூபத்தை நன்கு விளக்குகின்றது.

இதையே—

श्रुतिस्मृतिपुराणानामालयंकरुणालयम् ।
नमामि भगवत्पादशङ्करं लोकशङ्करम् ॥

என்ற ச்லோகமானது நன்கு விளக்குகின்றது. இந்தச்லோகத்தில் "லோகசங்கரம்" என்றபதமானது ஸகலஜனங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்கிறவர் என்ற அஸாதாரணமான விசேஷத்தைக்காண்பிக்கின்றது. இம்மகானால் அருளிச்செய்யப்பட்ட प्रस्थानत्रय-भाष्यங்களில் ச்ருதிஸ்மிருதிபுராணங்கள் இவைகளின் ஸாமாஸ்யம் நன்கு விளக்கப்பட்டது. இவரால் நிலைநிறுத்தப்பட்ட அத்வைதமதமானது அத்வைத தத்வம் எவ்விதம் ஸகல லோகங்களைத்

தன்னுள் அடக்கித்தான் மேலேநிற்கின்றதோ அவ்வாறே இது அநேக மதங்களையும் தன்னுள் அடக்கித்தான் மேலாகவே நிற்கின்றது. அத்வைதமான ப்ரம்மஸ்வரூபம் எவ்விதம் உலகமெங்கும் வ்யாபித்திருக்கின்றதோ அவ்விதமே இம்மதமும் உலகமெங்கும் பரவியிருக்கின்றது. ஆனால் அது, தன் நிஜஸ்வரூபத்தை எல்லா இடங்களிலும் வெளியிடவில்லை. வேறுபல ரூபங்களாக எல்லா இடங்களிலும் ப்ரகாசிக்கின்றது. தற்சமயம் இவ்வுலகில் ஸகல ஜனங்களும் ஏதோ ஒருவிதமான ஒற்றுமை நமக்கு வேண்டுமென்று கருதுகின்றனர். ஆனால் இவர்களால் கருதப்படும் இவ்விதமான ஒற்றுமை சாஸ்திரத்திற்குச் சம்மதமானதல்ல. சிலர்கள் ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்ட இந்த நிவ்ருத்தி மார்க்கத்தினால் உலகத்திற்குக்கெடுதல் ஏற்படுமென்று கருதுகின்றனர். அதற்கு உதாரணமாக प्रकृति துஷ்டி உபாதானதுஷ்டி முதலிய துஷ்டிகளால் கடைசியில் சோம்பல் ஏற்பட்டு அனர்த்தம் ஏற்படுகின்றது என்று கூறுகின்றனர். ஆனால் இவ்விதமான நிவ்ருத்தி, நமது ஆசார்யர்களால் அநுமதிக்கப்பட்டதல்ல. வைதிகமான கர்ம, உபாஸனம் முதலிய ஸத்கர்மங்களினால் வரிசையாக மனதிற்குத்தெளிவு ஏற்பட்டு பிறகு ஞானோதயம் ஏற்பட்டவுடன் கர்மாக்கள் அவனைப்பற்றுவதில்லை. அவனுக்குநான் அஸங்கமான ஆத்மஸ்வரூபம் என்ற ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டவுடனே தானாக ஏற்படும் நிவ்ருத்தியே. இங்ஙனம் ஞானிகளாலே மாத்திரம் ஸம்பாதிக்கக்கூடிய நிவ்ருத்தியானது கர்மிகளுக்குக் கிடையாது. ஆகையால் கர்மிகளுக்கும் ஞானிகளுக்கும் அவரவர்கள் மனதிற்குத்தகுந்தபடி சாஸ்திரங்களின் வ்யவஸ்தை செய்து ஒருவிதமான ஸாங்கர்யமும் வாராமல் காப்பாற்றினது நமது ஆசார்யாளே. இவர்கள் செய்த உபநிஷத்பாஷ்யங்களினால் ச்ருதிகளின் தாத்பர்யமும் கீதாபாஷ்யத்தினால் புராணங்களின் தாத்பர்யமும் सूत्रभाष्यத்தினால் இரண்டுகளின் ஸாமாஸ்யமும் நன்கு விளக்கப்பட்டது. இவ்விதம் உலகத்திற்கு சாந்தியையும் வைராக்யத்தையும் புகட்டி ஸகல லோகங்களுக்கும் க்ஷேமத்தைக்கொடுத்து உபகரித்தவர்களுள் நமது ஆசார்யாளைக் காட்டிலும் வேறு எவர் உளர். மேலும் ச்ருதி யுக்தி அநுபவம் ஆகிய மூன்றுகளிலும் உலகத்தில் தத்வத்தை நன்கு விளக்கிக் காட்டினர். ஆகையால்தான் இவருக்கு அபூர்வ சங்கரர் என்ற

பெயர்வழங்கப்பட்டது. अनुमद्विग्रहम् என்றுசொல்வதுண்டு. பரமசிவன், உமை, என்ற பார்வதியை பாதிசரீரத்திலுடையவர் இவரோ? அப்படியல்ல என்று அபூர்வ சங்கார் என்ற கருத்து விளக்கப்பட்டது. மற்றொரு அர்த்தம் அநுமானத்தினாலே பாதி போர்செய்து பௌத்தாதிகளை வென்றார் என்பதாம். மேலும் ஷண்மதஸ்தாபனம் செய்தாரென்ற ப்ரசித்தியும்இவருக்குத்தான் நாம்செய்யும் பஞ்சாயதனபூஜையில் உபாஸிக்கும் சிவன் அம்பிகை கணபதி, முதலிய ஐந்து தேவதைகளையும் கபாலிகர்களால் அனுஸரிக்கப்பட்ட மதத்தையும் அதன் தோஷங்களைமாத்திரம் களைந்துவிட்டு அத்வைதத்திற்கு அநுகுணமாக ப்ரதிஷ்டை செய்தார். இவ்விதம் ஜனங்களுடைய புத்தியை அனுஸரித்து அந்தந்த மதத்தை நிலைநிறுத்தி அத்வைதத்திற்கு அனுகுணமாகச் செய்தவர் நமது ஆசார்யாள் தான். ஆகையால் அவாளை நாம் ஸர்வதா ஸ்மரித்து கிருதார்த்தர்களாக ஆவோமாக.

பகவத்கீதை (12-வது அத்யாயம்.

பக்தியோகம்.

பிர்மஸ்ரீ வரகூர் வெங்கிட்டருமசாஸ்திரிகள்.

अर्जुनउवाचः—

एवं सततयुक्ताये भक्तास्त्वां पर्युपासते ।
येचाप्यक्षरमव्युक्तं तेषां के योगवित्तमाः ॥

இரண்டாவது அத்யாயம் முதல் 10-வது அத்யாயம்வரையில் நித்ய சுத்தபுத்தமான ப்ரம்மத்தினுடைய ஞானமும் உபாஸனமும் சொல்லப்பட்டது. பதினோராவதான விச்வரூப அத்யாயத்தில் தங்களின் ஸ்வரூபமுபாஸிக்கவேண்டியதாகவும் கூறப்பட்டது. ஆகையால் உபாஸகர்கள் மேல்பட்டவர்களா? அல்லது ஞானிகள் மேல்பட்டவர்களா? என்று ஸம்சயத்தோடு அர்ஜுனன்கேட்க பகவான் விடைகூறுகின்றார். ஹே அர்ஜுன நீகேட்பது பொதுவாகயிருக்கின்றது. அதைநன்றாக விளக்க வேண்டும். அதாவது கீழ்தசையில் இருப்பவர்கள் ஞானோபாயத்தைக்கைப்பற்றுவதுதேவலையா? அல்லதுபக்தியோகம்என்ற உபாயத்தைக்கைப்பற்றுவதுதேவலையா? என்றுகேழ்பாயேயானால் நான் பதில் சொல்லுகிறேன் கேள். அனதிகாரிகளுக்கு ஞானோ

பாயம் தகுதியல்ல. பக்தியோகந்தான் தேவலை. ஞானிகளாக ஆகக்கூடியவர்களுக்கு ஞானோபாயம்தான் தேவலை, ஆகையால் கர்மிகளுக்குள் பக்தியை அவலம்பித்தால் அவர்கள்தான் யுக்ததமர்களாக ஆகின்றனர், ஞானிகளைப்பற்றி பிறகுசொல்லுகிறேன் என்று கூறி விடாதச்ரத்தையோடு என்னை பஜனம் செய்பவர்கள் கர்மிகளுக்குள் யோகவித்தமர் என்றுகூறி ஆனால் ஞானிகள் மேற்பட்டவரில்லையா என்று கேழ்க மேல் ச்லோகங்களினால் அவர்களின் மேன்மையையும் விளக்கிக்காட்டி ஞானிகளுக்கு உபாயத்தில் கஷ்டம் அதிகமிருக்கிறதென்று சொல்லி பலம் அதிகம் அவர்களுக்கு அவர்கள்தானாகவே என்னைடைகின்றார்கள்.

" तेप्राप्नुवन्ति मामेव " ज्ञानी त्वात्मैव मे मतम् ।

என்று ஞானிகளைப்பற்றிக் கூறினார். ஆனால் பக்தியோகம் உள்ளவர்கள் எவ்விதம் என்றுகேட்டால் तेषामहं समुद्धर्ता என்று நான் அவர்களை கைதூக்கிவிடுகின்றேன் என்று சொன்னார். இதனால் என்ன விளங்குகின்றது என்றுகேட்டால் அஞ்ஜர்களுக்குள் பக்திசெய்பவர்தான் மேலானவர். ஞானத்தில் அதிகாரிகளுக்குள் ஞானத்தை ஸம்பாதிப்பவர்தான் மேலானவர்கள் என்று கூறினதாகும். இவ்விதமாக 12 ச்லோகங்கள் பர்யந்தம் உபாஸகர்களின்விசேஷங்களைக்கூறி பிறகு எட்டு ச்லோகங்களால் अद्वेष्टासर्वभूतानां என்று ஸ்திதப்ரக்ஞலக்ஷணங்களைக் கூறுகின்றார். ஆகையால் நாமறிந்துகொள்வது என்னவென்றால் ஞானத்தில் அநதிகாரிகளாக விருப்பார்களேயானால் அவர்கள் பக்தியைக் கைப்பற்றுவதே நலம். இல்லாவிடில்

अज्ञस्याल्पप्रबुद्धस्य सर्वं ब्रह्मेति यो वदेत् ।
यदानिरयजालेषु स तेन विनियोजितः ॥

என்று அவனைக் கெடுத்ததாகவே ஆகின்றது. ஆகயைால் அந்த பக்தியை விடாமல்செய்துவந்தால் கடவுளின் கருணைக்குப் பாத்திரமாவான். இதையே பகவான்

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

என்று சொல்லுகிறார்' ஆகையால் திருடமான பக்தியால் பகவான் ஈடுபட்டு அபீஷ்டத்தைக்கொடுப்பாரானதால் பக்தியோகம்சிறந்த ஸாதனமாகும்.

வ்யாஸ தாத்பர்யவிமர்சம்.

(பிர்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரியன்)

உலகத்தில் ஆசார்யர்களுக்குள் நமது வ்யாஸாசாரியனைப் போல் பக்ஷபாதமன்றி ப்ரம்மஸ்வரூபத்தை நன்கு வெளியிட்டவர் வேறு யாருமல்ல. ப்ரத்தியக்ஷமோ அநுமானமோ ஜகத்காரணமான வஸ்து இருக்கவேண்டுமென்று தெரிவிக்குமேதவிர அது ஜடமா சேதனமா ஒன்றா பலவா? என்ற விஷயங்களைத் தெரிவிக்கமாட்டா. ஆகையால் அநேக மதஸ்தர்கள் பரமாணு ஜகத்காரணம் ப்ரதானம்தான் ஜகத் காரணம் என்று அநுமான ப்ரமாணத்தினால் தர்க்கம்செய்து வருமளவில் நமது வ்யாஸர் अथातो ब्रह्मजिज्ञासा சாஸ்திரத்தை ஆரம்பித்தார், இதர மதஸ்தர்களுக்கு 4. ஸூத்திரங்களுக்குப் பிறகுதான் சாஸ்திரம் ப்ரவர்த்திக்கின்றது. நமக்கோ அவ்விதமன்று. மேலும் இவர் சிவனையோ விஷ்ணுவையோ பற்றிபேசவில்லை. உபாஸனமோ ஞானமோ அதிகாரிகளுக்குத் தகுந்தபடி ஸாதனமாகவேண்டி, இரண்டு விதமான ப்ரும்மத்தை நிரூபணம் செய்தார். अन्तस्तद्धर्मोपदेशात् என்று இந்தச் ஸூத்திரத்தினால் தெரிவிக்கப்படும் ஆதித்யாந்தர்வர்த்தியான புருஷர் சிவனோ? விஷ்ணுவோ? என்று சண்டைபோடுகின்றனர். யார் மதத்திலும் ஸரி, அநேக ஈச்வரன் கிடையாது. ஸூத்திரங்களின் அமைப்பைப் பற்றிமாத்திரம் யோஜனைசெய்தால் வெகு ஆச்சர்யமான அமைப்பு என்று புலப்படுகின்றது. ஆரம்பணாதிகரணம் முதலிய அதிகரணங்களினால் ஸகலபதார்த்தங்களில் मिथ्यात्व பொய் ஸ்வரூபத்தையும் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் என்னவிதமான ஸம்பந்தம் என்று விசாரித்தால் அந்த ஸம்பந்தம் இதர மதஸ்தர்களுக்குப் பேதாபேதத்தையொட்டியே स्वामिभृत्यभावादि ரூபமாக ஏற்படுகின்றது, என்றும் அது சாஸ்திர ஸம்மதமல்லவென்று நன்கு अंशो नानाव्यपदेशात् என்ற ஸூத்திரத்தினால் விளங்குகிறதென்றும் வேதவிருத்தமான பாஞ்சராத்ராதிதந்த்ரக்ரந்தங்களை இதர மதங்களில் ப்ரமாணமாகக்கொண்டு ஸ்வமதம் சிறக்கும்படி செய்வது विप्रतिषेधाच्च என்ற ஸூத்திரத்தினால் தள்ளப்பட்டதென்றும் புலப்படுகின்றது. கடைசியில் முக்தனுடைய ஸ்வரூபமும் உபாஸகனுடைய ஸ்வரூபமும் எவ்விதமென்று விசாரித்து உபாஸகனுக்கு गमनादि கள் ஸம்பவிக்கிறதென்றும் முக்தனுக்கு अत्र ब्रह्म समश्नुते

என்று नमत् கிடையாதென்றும் வெளியாகின்றது आत्मप्रकरणात् என்ற சூத்திரங்களினால் முக்தனுடைய ரூபம் ஆத்மாதானென்று தெரிவிக்கப்படுகின்றது. ஒரேவஸ்துவிற்கே அக்ஞான தசையில் ப்ரும்மம் என்றும் ஞான தசையில் ஆத்மாவென்றும் பெயர். ஆகையால் உபக்ரமம் பராமர்சம் உபஸம்ஹாரம் முதலிய இடங்களில் ஆத்மாவையே பேசுகிறபடியாலும் சிவன் விஷ்ணு என்ற வார்த்தையை எடுக்காதபடியாலும் இதற்கு ஆத்ம சாஸ்திரம் என்ற பெயரினாலும் நிஷ்பக்ஷபாதமாகப் பார்த்தால் அத்வைதமதந்தான் வ்யாஸாசார்யாருக்கு ஸம்மதம் என்று நிச்சயமாகப் புலப்படுகின்றது.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

ஸத்புத்ரன் கருடன்.

1. தக்ஷகர்பெண் விநதை. அவள் புருஷன்பெயர் கச்யபர் இந்த தாயின் தவத்தால் தகப்பன் அருளால் பிறந்த பிள்ளை கருடன். இவரது ஸஹோதரன் அருணன். ஐநூறுவருஷம் முட்டையாக இருந்து பிறகு பிறந்தவர் கருடன். நல்லபலசாலி. பிறந்தவுடன் அநுமாரைப்போல் ஆகாசத்தில் பறந்தார். இவரது பெரிய சரீரத்தைக்கண்டு தேவரும்பயந்து ஓடினர். பலத்தில் இவருக்கு ஈடு யாருமேயில்லை. தகப்பனை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார். தாயின்முகம் ஸந்தோஷமாகயில்லை. அம்மா! என்னகவலை உனக்கு? ஏன் வாட்டமாக இருக்கிறாய்? என்று கேட்டான். தன்னிடத்தில் அதிக ஆசையாக பிள்ளை இருப்பதைக்கண்ட தாய் ஸந்தோஷப்பட்டாள்.

2. அப்பா! நீ கேட்டவுடனே என் கவலையெல்லாம் தீர்ந்தது. உன்பெரியம்மா என்னோடு 'வெள்ளைக்குதிரைவால் கருப்பு' என்று பந்தயம் போட்டாள். இல்லை வெளுப்புதான் என்றேன் நான். தோத்தவள் ஜெயித்தவளுக்கு அடிமை என்று ஏற்பாடு செய்தோம். அவள் தன்பிள்ளையைக்கொண்டு வாலைக்கருப்பாக்கிவிட்டாள். சொன்னவார்த்தைத் தவறலாமா? நான் அடிமையாய் விட்டேன். இதுதான் எனக்கு கஷ்டம் என்றாள். அம்மா! நீ கஷ்டப்படாதே. உனக்குபதில் நான் வேலைசெய்கிறேன். என்றான் கருடன். அதேபோல் நித்யம் பாம்புகளைத் தூக்கிக்கொண்டு சொன்ன இடத்திற்கு போனான்.

3. ஒருநாள் அம்மா என்செய்தால் நம்மைவிடுவாள்; கேளு அவளை என்றான் பிள்ளை. விநதை கத்ருவைக்கேட்டாள். கத்ரு, முன்னே தேவரும் ராக்ஷஸர்களும் பார்க்கடலைக் கடைந்தார்கள், அதிலிருந்து அமிருதம் உண்டானது. அதைச்சாப்பிட்டால் சாகாமலிருக்கலாம் என்றுயோசித்தாள். அமிருதத்தைக்கொண்டு வந்தால் உங்களை விட்டுவிடுகிறேன், என்றாள். இதைக்கேட்டான் கருடன். இதோ! ஒரே நிமிஷத்தில் கொண்டுவருகிறேன், உத்திரவுகொடு என்று அம்மாவை நமஸ்காரம் பண்ணினான். அவள் ஆசீர்தாவம் செய்தாள். குழந்தை க்ஷேமமாகவரும்படி தேவதைகளை வேண்டினாள்.

4. உடனே அப்பாவிடம் சென்றான். அமிருதங்கொண்டு வா உத்திரவு கொடுங்கள் என்றான். அப்பா! அது ரொம்பக்கஷ்டம். உன்னால் முடியுமா? என்றார் பிதா. உங்கள் அருளிருந்தால் ஆகாதகார்யம் உண்டோ? உத்திரவுகொடுங்கள். ஒருநொடியில் கொண்டுவருகிறேன் என்றான். ஆனால் அருகிலுள்ள மடுவில் ஓர் பெரிய யானையும் ஆமையும் சண்டைபோட்டுக்கொண்டிருக்கின்றன, அதைத்தூக்கிஇமயமலையில் எரிந்துவிட்டு போய் வா என்றார் அவர். அப்பா அவை ஏன் சண்டைபோடுகின்றன என்றான். இவ்விருவரும் விபாவஸு, ஸுப்ரதிபர் என்றசஹோதரர்கள். தகப்பன்ஸொத்திற்காக சண்டையிட்டார்கள். ஒருவருக்கொருவர் சாபம் கொடுத்துக்கொண்டனர். சாபத்தால் யானையாகவும், ஆமையாகவுமானார்கள். இந்தஜன்மாவிலும்சண்டை ஓயவில்லை. என்றார் பிதா.

5. அல்பஸொத்துக்காக அண்ணன்தம்பி சண்டை போடலாமா? அந்யோன்யத்தைவிடலாமா? ஸொத்து ஆசையால் கோபம்வந்தது. கோபத்தால் த்வேஷம்வந்தது. த்வேஷத்தால் இருவரும் கெட்டார்கள். ஆகையால் காமக்ரோதங்களைவிடு. அது நரகத்திற்கு வாசப்படியாகும்.

6. அப்பாவின் உத்திரவுப்படி இரண்டையும் தூக்கிச்சென்றார் கருடன். வழியில் ஓர் பெரிய ஆலமரத்தைக்கண்டார், அதில் கொஞ்சம் களைப்பார உட்கார்ந்தார். அந்த கிளை உடனே முறிந்தது. வாலகில்யர் என்ற ரிஷிகள் அக்கிளையில் தவம்செய்து கொண்டிருந்தனர். அவர் நமது கட்டைவிரல் அளவு உயரமுள்ளவர். அறுபதினாயிரம்பேர். உருவில்சிறியவர் ஆனாலும், தவத்தில்

பெரியவர். அவர்கள் தவத்தைக் கெடுக்கலாமா? பெரியோருக்கு அபசாரம் செய்யலாமா?

7. வாலகில்யர் பலர்கூடி ஓர் பலாச ஸமித்தை ச்ரமப்பட்டு தூக்கினர். இதைக்கண்டு இந்த்ரன் சிறித்தான். நீ ஒருவனிடம் அவமானப்படுவாய் என சபித்தார்கள் அவர்கள். கருடன் ஸ்வ பாவத்திலேயே நல்லவன். எவருக்கும் கெடுதல் செய்யமாட் டான். அதிலும் பெரியோருக்கு அபசாரமே செய்யமாட்டான். கிளை முறிந்ததே! முனிவர் தவங்கலையுமோ? அவர் கோபிப்பரோ? என பயந்தான். அக்கிளையைக் கீழே விழாமல் காலால் தூக்கி வந்தான். ஹிமாலயத்தில் மெதுவாய்க் கீழேவைத்தான்.

8, ரிஷிகள் இவன் குணத்தைக்கண்டு ஸந்தோஷப்பட்ட னர். நீ ஸுகமாக அமிருதத்தை அடைவாய்; என ஆசீர்வதித் தனர். உடனே தேவலோகம்போனான். அமிருதகலசத்தைப் பார்த்தான். அக்னிக்கோட்டையிலிருந்தது அது. அதை தைர் யமாகத்தாண்டினான். ஆக்ஞாசக்ரத்தைப் பார்த்தான். அதிலும் நுழைந்து உள்ளேபோனான். இரண்டு ஸர்ப்பங்கள் சீறி மேல் விழுந்தன. இறந்தாலும் தாய் ஸேவையை விடுவதில்லையெனத் துணிந்தான். கலசத்தைத் தூக்கினன்,

9. தேவஸேனை சண்டைக்கு வந்தது. அதில் பலரைக் கொன்றான். இந்திரன் வஜ்ராயுதத்துடன் வந்தான். அதையும் இவன் லக்ஷ்யம்செய்யவில்லை. என்? வாலகில்யர் வரமளித்தனர். பெற்றோரிடம் பேர் அன்புகொண்டவன் இவன். இவைகள் இவனைக்காத்தன. வாலகில்யரை அவமதித்ததால் இந்த்ரன் தோற்றான். கருடன் ஜயித்தான். அமிருதகலசத்துடன் ஊருக் குத்திரும்பினான். வழியில் வைகுண்டநாதனை தர்சித்தான். இவன் வீர்யத்தையும், மாத்ரு பக்தியையும்கண்டு சந்தோஷித்தார். என்னவரம் வேண்டுமென்றார். விஷ்ணுபக்தியே வேண்டும் என் றான். ஆனல் நமது வாஹநமாயிரு என்றார்.

10. தாயின் கடனைநீக்கி உத்திரவு பெற்றுவருவதாகச் சொல்லிக்கிளம்பினான். விநதை குழந்தைகதி என்ன ஆச்சோ? என வருந்தினள், உடனே உள்ளேபுகுந்தான்கருடன். தாயே! இதோ வந்தேன். கத்ருவைக்கூப்பிடு. அடிமையை நீக்கு என் றான். கலசத்தைக்கீழே வைத்தான். அடிமை அகன்றது என் றாள் கத்ரு. கலசத்தைக்காணோம், இந்த்ரன் மாயையாய் அதைத்

தூக்கிச்சென்றான். பேராசைபிடித்த கத்ரு ஏமாந்தாள். ஸத்புத்திரனைப்பெற்ற விநதை ஸௌக்யப்பட்டாள். நற்குணத்தினால் கருடன் விஷ்ணுவுக்கு வாஹநமானான். பெரிய திருவடி கருடாழ்வார் என்று போற்றப்படுகிறான். அதிகம் சொல்வானேன். கோவிலில்வைத்து அவரைக் கும்பிடுகிறோம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா

வாரவிருத்தாந்தம்.

ஸ்ரீ கீதோபன்யாஸம். 20உ வாணியம்பாடிக்கு அடுத்த திருப்பத்தூரில் ஆறுமாதமாக நடந்துவந்த கீதோபன்யாஸம் பூர்த்தியானது. இவ்வூரில் சில ஆண்கடுளுக்குமுன் ஸ்ரீசங்கர ஜயந்தி விசேஷமாக நடந்தது. ஓர் வேதகாவ்யவகுப்பும் நடைபெற்றது. கால தர்மத்தைஒட்டி அவை கொஞ்சம் புற்றுயிர் பெற்றிடுமென நம்புகிறோம். ஸ்ரீபகவத் பாகவதாள் பஜகோவிந்தத்தில் "பகவத்கீதாகிஞ்சிததீதா" என்றுநமக்கு பரமச்ரேயஸ்ஸை அளிப்பதுகீதை, எனக்கூறியுள்ளார். அத்தகையகீதையைப் பல நாள்கேட்டு பரிபாகத்தைப் பலரும் அடைந்திருப்பார். ஏனைய ஊராரும் கீதாமூலம் நன்மைபெறுக.

பெயருக்கேற்றவேலை. ஆழ்வார்திருநகரியில் கம்பராமாயணம் திவ்யப்ரபந்தம் முதலிய ஸத்கதாகாலக்ஷேபங்கள் நடக்கின்றன. ஏகாதசி உத்ஸவத்தைமுன்னிட்டு ஆழ்வார்கோவிலில் விசேஷமாக மதஉபன்யாஸங்களை நடத்தத்தக்க எற்பாடு செய்யப்படுகின்றது. இதைக்கேட்க பக்தர்உள்ளம் பேரானந்தம் பெறும். பகவதாராதனையுடன் பக்திமார்க்கத்தையும் தர்மத்தையும் உபன்யாஸமூலமாக விளக்கி வந்தால் வீண்சண்டைகள் வெகுதூரம் குறையும். பரமபாவநமான தேவாலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையை பாமர ஜனங்களுக்கு உத்ஸவகாலத்தில் உபதேசித்தல் மிக நலம்.

ஸ்வாகதம். 27உ காலைமுதல் ப்ரதிதினம் சென்னைப் புரசபாக்கத்தில் ஓர் வேதவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. நாகமௌளத்கல்யர் என்ற பெரியார் வேதாத்யயநம் செய்தலும் செய்துவைத்தலும் தபஸ் என்றார். கலியில் சென்னையில் வேதவகுப்பு, என்றால் ஆஸ்திகர் அனைவரும் அதற்கு நல்வரவு கூறுவர். அங்கு பேட்டைக்கோர் வகுப்புவேண்டுமென்பது நமதாசை.

இரண்டையும் போற்றுகிறேம். 27உ முதல் நான்கு நாள் ஸ்ரீரங்கத்தில் நமது பத்திராதிபரால் நாலு அத்வைத உபன்யாஸங்கள் நடந்தன. இந்த உபன்யாஸத்திற்கு மூலதநமளித்தவர் பிர்மஸ்ரீ T. K. பாலசுப்ரமண்ய அய்யராவர் உபன்யாஸகரை உலகறியும். தநத்தை அளித்த தனிகரையும் வித்யாதனத்தை அளித்த வித்வானையும் எவரும் போற்றுமலிரார்.

ஸத்கார்யம்30உ முதல் தஞ்சை ஸ்ரீவிச்வநாதஸ்வாமி ஆலயத்தில் அமர்ந்த ஷண்முகனுக்கு விசேஷ வைபவத்துடன் அபிஷேக அர்ச்சனைகளும் ஸங்கீதக்கச்சேரியும் ஸத்கதாகாலக்ஷேபங்களும் நடக்கின்றன. பலர்கூடி பகவத்பக்தியில் ஸாத்விகமாக ஈடுபட்டால் பக்தரும்மற்றேரும் இஹபர சுகத்தைப்பெறுவர்.

அன்னதாநம். பொதுவாக எல்லாதாநமும்சிறந்ததே ஆயினும் வித்யாதாநத்திற்கும் அன்னதாநத்திற்கும் ஈடாக ஒன்றையும் சொல்லமுடியாது. வித்யாதாநத்திற்காவது அதிகாரஸம்பத்தைத் தேடவேண்டும் அன்னதாநத்திற்கோ பசியுள்ளோரே பாத்ரம் ஆவர். அதிலும் வித்யா விநயஸம்பந்நரான விப்ரச்ரேஷ்டர் குக்ஷியில் நமதன்னம் விழுமானுல் அமோகமான புண்யத்தை அது அளிக்கும். ஸ்ரீரங்கத்தில் 18உ கோவில் ஆயிரக்கால் மண்டபத்தில் தாராநல்லூர் ஸ்ரீரங்கநாதய்யர் அன்னதாநம் செய்தார். இப்புண்யத்திற்கு அளவேது?

அ. இ, வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸபை. ஷடிஸபை கல்கத்தாவில் டிஸம்பர் 27. 28. 29. என்ற மூன்றுதினங்களில்நடக்கும். வல்லபாசார்யமடாதிபதியும் பெரிய ஸம்ஸ்கிருத வித்வானுமான ஸ்ரீமான் கோஸ்வாமிகாகுல்நாத்ஜிமகாராஜ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர். மஹா மஹோபத்யாய துர்க்காசரண ஸாங்க்ய வேதாந்ததீர்த்தர் உபசாணைக்கமிட்டித் தலைவராவர். இச்சபைகூடி தர்மத்திற்கு பலத்தை அளிக்குமென நம்புகிறேம்.

குருபக்தி. சென்னையில் ஸ்ரீகோவிந்தாசார் என்ற குருபக்தர் ஸ்ரீஉத்தராதிமடம்ஸ்வாமிகளை அழைப்பித்து 28உ 1500பேருக்கு வநபோஜநம் அளித்தார்.

ஸ்ரீவத்ஸ வெ. சோமதேவசர்மா.